**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**
**முன்னிலை: திரு.S.B. சுஜித், B.A. B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**

**2026–ம் ஆண்டு ஜுலை திங்கள் 02–ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.106/2026**
**(CNR.NO: TNRM05-000746-2026)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>சார்பு ஆய்வாளர்,<br>இராமேஸ்வரம் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 42/2026 |
| | **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | : | முத்துராஜ் |
| 3. | த/பெ | : | நாகேந்திரன் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | 1/18, இராமநாதசுவாமி நகர், இராமேஸ்வரம் |
| 6. | வயது | : | 27/2026 |
| 7 | சம்பவ நாள் | : | 16.02.2026–ம் தேதி 21.30 மணி |
| 8 | புகார் தேதி | : | 17.02.2026–ம் தேதி 07.00 மணி |
| 9 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 17.02.2026–ம் தேதி 10.00 மணி |
| 10 | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | எதிரி தற்போது வரை நீதிமன்ற காவலில் உள்ளார் |
| 11 | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 05.06.2026 |
| 12 | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 16.06.2026 |
| 13 | விசாரணை முடிவுற்ற நாள் | : | 30.06.2026 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:30 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரியின் மீது பிரிவுகள் 115(2), 118(1), 351(3) BNS படி |
| 15 | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரியின் மீது பிரிவுகள் 118(1), 351(3) BNS படியும். |
| 16 | காலதாமதத்திற்கான காரணம் | : | காலதாமதம் ஏதும் இல்லை. |
| 17 | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை / எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை<br>அ.சா.1 – 23.06.2026 / அ.சா.1 – இல்லை<br>அ.சா.2 – 30.06.2026 / அ.சா.2 – 30.06.2026. |
| 18 | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C/351 BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 02.07.2026 |
| 19 | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20 | எதிரி/குற்றமுறையீடுனர் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Crpc/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21 | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட U/s.348 BNSS /311 Crpc பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22 | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 23 | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24 | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.நாகேந்திரன் |
| 25 | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26 | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 02.07.2026 |
| 27 | வழக்கின் முடிவு குறித்து | : | 02.07.2026 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:37 +0530

| | | | |
|---|---|---|---|
| | எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | | |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக, எதிரி 118(1), 351(3) BNS படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து பிரிவு 271 (1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.** |

இவ்வழக்கு 05.06.2026–ம் தேதியன்று பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம், 2023 (இனி கீழ் வரும் இடங்களில் **"BNSS"** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 210 BNSS–ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 02.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இலவச சட்ட வழக்கறிஞர் திரு.நாகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இவ்வழக்கின் வாதிக்கு எதிரியான முத்துராஜ் என்ற மகனும் ஆதிசக்தி என்ற மகளும் உள்ளனர் என்றும் வாதியின் மகனான எதிரி முத்துராஜ் அடிக்கடி குடித்துவிட்டு வந்து வாதியிடம் பிரச்சனை செய்து அவரை அடிப்பதை வழக்கமாக கொண்டுள்ளதாகவும், மேலும் வாதியின் மகள் ஆதிசக்தி காதல் திருமணம் செய்து கொண்டதால் ஆதிசக்தி வாதியின் வீட்டிற்கு வரும்போதெல்லாம் எதிரி முத்துராஜ் வாதியிடம் பிரச்சனை செய்து வந்துள்ளார் என்றும் இந்நிலையில் கடந்த 16.02.2026 தேதி இரவு சுமார் 09.30 மணி அளவில் மதுபோதையில் வீட்டிற்கு வந்த எதிரி

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:41 +0530

முத்துராஜ் வீட்டில் உறங்கி கொண்டிருந்த ஆதிசக்தியின் குழந்தையின் மீது செங்கலை எடுத்து அடிக்க சென்றதால் அதை வாதி தடுத்து எதிரி முத்துராஜை வீட்டிற்கு வெளியே இழுத்து வந்தபோது, எதிரி முத்தராஜ் செங்கலால் வாதி சித்ராவின் முன் தலையின் மீது அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும் மேலும் கையால் வாதியின் கன்னம் தோள்பட்டை பகுதிகளில் அடித்தும் கையில் வைத்திருந்த செங்கலை காட்டி வாதி சித்ராவை பார்த்து இனிமேல் உனது மகளும், பேரக்குழந்தையும், வீட்டிற்கு வந்தால் உன்னையும் உனது மகளையும் அடித்து கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு BNSS பிரிவு 227 கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் சிறையில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. பின்பு குற்றம் சாட்டப்பட்டவர்க்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 263(1) BNSS–படி குற்றம் சாட்டப்பட்டவர் ஆன எதிரியின் மீது பிரிவுகள் 118(1), 351(3) BNS குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 265 (1) BNSS–ன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:46 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 சார்பு ஆய்வாளர், நகர் காவல்நிலையம். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:**

கடந்த 16.02.2026 அன்று இரவு 9.30 மணியளவில் எதிரி அ.சா.1ன் பேரக்குழந்தையின் மீது செங்கல்லை வைத்து அடிக்க வந்ததை அ.சா.1 தடுத்தபோது செங்கலை வைத்து அ.சா.1ன் தலையின் மீது அடித்து இரத்தக்காயத்தை உண்டாக்கி தோள்பட்டை, கன்னம் பகுதியில் அடித்து ஊமைக்காயத்தை உண்டாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். அச்சம்பவத்தின்போது வழக்கு பட்டியல் சாட்சி-2 ஆதிசக்தி, சாட்சி-3 கீதா ஆகியோர்கள் சம்பவத்தை கண்ணுற்று சண்டையை விலக்கிவிட்டுள்ளார்கள். அ.சா.1யை அவரது மகளான வழக்கு பட்டியல் சாட்சி-2 ஆதிசக்தி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் 17.02.2026-ம் தேதி காலை 6.00 மணிக்கு அ.சா.2 ஆனந்தகுமார் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலைப் பெற்று காலை 6.15 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த அ.சா.1 சித்ரா, வயது 47 என்பவரை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் 7.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.42/2026 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன்கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே காலை 8.00 மணியளவில் சம்பவ இடம் சென்று வழக்கு பட்டியல் சாட்சிகள் 5 சவுந்தர்ராஜன் மற்றும் 6 ராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம், அ.சா.ஆ-

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:49 +0530

4 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகளான வழக்கு பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு எதிரியை தேடிவந்த நிலையில் 17.02.2026 ம் தேதி 10.00 மணிக்கு இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் உள்ள காந்தி சிலை அருகில் வைத்து எதிரியை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக்காவலுக்கு ஒப்படைத்துள்ளார். பின்னர் வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 சித்ரா என்பவருக்கு சிகிச்சை அளித்த வழக்கு பட்டியல் சாட்சி-7 அரசு மருத்துவர் திரு.சங்கரசுப்பு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய சாதாரண காயம் என்ற காயச்சான்றை அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டைப் பெற்றுள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS யிலிருந்து மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 தயார் செய்து எதிரி மீது 115(2), 118(1), 351(3) BNS ஆக 02.03.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

அ.சா.1 திருமதி.சித்ரா அரசு தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். அ.சா.2-புலன்விசாரணை தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சாட்சியத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

## <u>Questioning U/s.351 (1) (b) BNSS</u>

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் ஆன எதிரிக்கு பாதகமாக உள்ளவை குறித்து U/s.351 (1) (b)BNSS-ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

## <u>Point for determination</u>

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:48:55 +0530

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவரான எதிரியின் மீது பிரிவுகள் 118(1), 351(3) BNS படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**<u>இருதரப்பு வாதங்கள்</u>**

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 தனது வாதத்தில் புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சியாக இருந்தாலும் அ.சா.2 சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களான எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர்களான எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரரான அ.சா.1 பிறழ் சாட்சியாக இருப்பதாலும், அ.சா.2-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவரான எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது. எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**<u>Appreciation of Evidence</u>**

10. வழக்கு சம்பவம் குறித்து அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில், அ.சா.1 சித்ரா தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், வழக்கு சம்பவத்தில் தனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், நான் தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் எதிரிகளுடன் பேசி சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை வழக்கு சம்பந்தமாக தனக்கு எந்த விபரமும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த நிலையில் அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியமானது தனது போலீசார்

Digitally signed by SUJITH
SUJITH Date: 2026.07.02 17:49:00 +0530

விசாரணை சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பட்டு அமைந்துள்ளது. எதிரியை குற்ற செயலுடன் தொடர்புபடுத்தும் வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. அ.சா.1ன் சாட்சியம் மூலமாக எதிரி செங்கலால் தலையில் தாக்கி இரத்தக்காயத்தை உண்டாக்கியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அரசுதரப்பில அ.சா.1 பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதிலும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் வெளிக்கொணரப்படவில்லை.

மேற்கண்ட காரணங்களால் இவ்வழக்கின் அரசு தரப்பு கண்ணுற்ற சாட்சிகளான வழக்கு பட்டியல் சாட்சி–2 ஆதிசக்தி மற்றும் சாட்சி–3 கீதா மற்றும் கேள்வியுற்ற சாட்சி–4 விஸ்வநாதன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் சௌந்தர்ராஜ், ராமநாதன் மற்றும் மருத்துவரான சங்கரசுப்பு ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்குறை செய்யப்பட்டது.

11. இவ்வழக்கில் அ.சா.2 ஆனந்தக்குமார் என்பவர் தனது சட்டப்படியான புலன்விசாரணை தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியமானது வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு மேற்கொண்ட புலன்விசாரணை தொடர்பாக அமையப் பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 சித்ரா எதிரி தாக்கியதாக எவ்வித சாட்சியமும் அளிக்காதநிலையில் அ.சா.2 ஆனந்தக்குமார் என்பவரின் சாட்சியம் மூலமாக மட்டும் எதிரி மீது உள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது.

எனவே எதிரி கடந்த 16.02.2025ம் தேதியன்று இரவு 9.30 மணியளவில் மதுபோதையில் அ.சா.1 சித்ராவின் முன்தலையில் செங்கலால் அடித்து சிறுகாயத்தை உண்டாக்கியும், கொலை மிரட்டல் விடுத்ததன் மூலமாக பிரிவு 118(1), 351(3) BNSன்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:49:05 +0530

கீழான குற்றச்சாட்டை புரிந்ததாக அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து பிரிவு 271(1) BNSS ன்கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12. முடிவாக, எதிரியின் மீது 118(1), 351(3) BNS படி குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து பிரிவு 271 (1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

13. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

14. இவ்வழக்கில் எதிரியானவர் 17.02.2026ம் தேதியன்று கைது செய்யப்பட்டு ,நீதிமன்ற காவலில் உள்ளார் .

*இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 02 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.*

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:49:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

<u>பின்னிணைப்பு :–</u>

(i) <u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | சித்ரா | புகார்தாரர் |
| அ.சா.2 | – | ஆனந்தகுமார் | சார்பு ஆய்வாளர் |

TNRM050007462026



(ii) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.02.2026 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 17.02.2026 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 17.02.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 17.02.2026 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.5 | 17.02.2026 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 17.02.2026 | காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 17.02.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

(iii) <u>அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை</u>

(iv) <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :</u>
இல்லை.

<u>குறிப்பு:</u>

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின்போது எதிரியானவர் நீதிமன்ற காவலில் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.02 17:49:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.